செ.வெ.எண்: 133 நாள்: 21.2.08

தமிழ் வளர்ச்சித் துறை.

கணியன் பூங்குன்றனார் பரிசு - ரூ.1 லட்சம் பரிசு.

---

"கணினி யுகத்திற்கேற்பத் தமிழ் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் கணியன் பூங்குன்றனார் பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/- வழங்குவதுடன் அந்த நிறுவனத்திற்குப் பாராட்டிதழும் வழங்கப்படும்.''

பதிவு செய்வதற்கான விதிமுறைகள்:

1. தமிழ் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட மென்பொருளாக இருத்தல் வேண்டும்.

2. மென்பொருள் தனி ஒருவராலோ, கூட்டு முயற்சியாலோ, நிறுவனத்தாலோ உருவாக்கப்பட்டிருக்கலாம். கூட்டு முயற்சி எனில் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

3. இப்போட்டியில் கலந்து கொள்ள, பதிவுக் கட்டணமாக ரூ.100/- தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் பணமாகச் செலுத்தப்படலாம். அல்லது கேட்பு வரைவோலையாக "The Director of Tamil Development, Chennai'' - payable at Chennai'' என்ற பதவிப் பெயரில் அனுப்பி வைக்கலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 5.3.2008-க்குள் வந்து சேர வேண்டும்.

பதிவு செய்வதற்கும், பரிசுப் போட்டியில் கலந்து கொள்வதற்கும் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை-600 008.
தொலைபேசி எண்.044-28190412, 28190413

20/2/08

தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.